[1st April 1963

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகளுடைய பரம்பரைக்கு அந்த உத்தியோகத்தைக் கொடுப்பது தவறு என்றாலும், அவர்களும் தேர்வு வைக்கப்பட்ட பிறகுதான் அதிகாரிகளாக வருகிறார்கள், ஆகவே, உள்ளூரிலேயே உள்ளவர்கள், செல்வாக்கு உள்ளவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றால், அவர்களுக்கு இந்த உத்தியோகம் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : பரம்பரை பாத்தியமாக நியமனம் கொடுக்கக் கூடாது; அவ்வளவு தான். ஒரு உத்தியோகத்திற்குப் பல தகுதிகளைப் பார்க்கிறோம். அப்படி அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அந்த தகுதிகள் உள்ளவர்களாக இருந்தால், அவர்களை நியமனம் செய்வதில் ஆட்சேபம் இல்லை.

பக்கிங்காம் கால்வாய்

*472 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை பக்கிங்ஹாம் கால்வாயில் படகு மூலம் மக்கட் போக்கு வரத்து நடத்தும் திட்டம் எந்த அளவில் உள்ளது ?

THE HON. SRI V. RAMAIAH : The Government have decided that the improvements to the Buckingham Canal should await the implementation of the improved drainage scheme of Zone V (Adayar, Mylapore, etc.) by the Corporation of Madras, as the two schemes are interlinked.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் போக்குவரத்தை அதிகரிக்கும்; தேசிய நெருக்கடி காலத்தில் போக்குவரத்து மிகவும் அவசியம் என்ற காரணத்தினால் இதை உடனடியாக எடுத்து நடத்த உத்தேசம் உண்டா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : போக்குவரத்து மட்டுமல்ல ; இன்னும் பல பிரச்னைகள் இதில் சேர்ந்து இருக்கின்றன. இதை ஒரு நல்ல திட்டமாக அமைக்க வேண்டும் என்பதுதான் நிபுணர் குழுவின் ஆலோசனை. அதை ஒத்திப் போட வேண்டும் என்பது அல்ல நினைப்பு. இந்த திட்டத்திலே பல பிரச்னைகள் சிக்கியிருக்கின்றன. இந்த 'ஸோன் 5, மைலாப்பூர் பகுதி சாக்கடை' பக்கிங்காம் கனலில் வந்து சேருகிறது. அதற்கு ஒரு திட்டம் வேண்டும். அது உருவாகிக் கொண்டு இருக்கிறது. இதற்கு ட்ரெட்ஜர் முதலியவை வாங்க வேண்டும். அதற்கு அன்னியச் செலாவணி வேண்டும். அது தொடர்ந்து நடக்க வேண்டிய திட்டம். ஏதோ ஒத்திப் போடுவதாக இல்லை நிலைமை.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : சென்னையிலே ஓடக்கூடிய கூவம் நதியானது ஒரே துர் நாற்றம் வீசுவதால், அது பலகாலமாக தீர்க்கப்படாத பிரச்னையாக இருப்பதினால், சென்னை அரசாங்கம் முயற்சி செய்து அதை நிவர்த்திப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

1st April 1963]

கனம் திரு. வெ. ராமைய்யா : சென்னை அரசாங்கமும், சென்னை நகர சபையும் சேர்ந்து, கூவம் நதி, பக்கிங்ஹாம் கெனால் இவைகளையெல்லாம் போக்குவரத்து வசதி உள்ள முறையில், அங்கு ஏற்படக்கூடிய பலவிதமான கஷ்டங்களைப் போக்கக்கூடிய முறையில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நல்ல திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதை விரைவிலே நிறைவேற்றுவதற்கு அரசாங்கமும், சென்னை நகரசபையும் எல்லா முயற்சிகளையும் எடுக்கும்.

புலவர் கா. கோவிந்தன் : அமைச்சர் அவர்கள் திட்டம் உருவாக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் எவ்வளவு விரைவில் அமுல் நடத்தப்படும் என்பதையாவது அரசாங்கம் அறிவிக்குமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : ஆராய்ச்சியெல்லாம் முடிந்து, இந்தத் திட்டத்தை எடுத்துச் செயல் நடத்த வேண்டிய கட்டத்தில் தான் இருக்கிறோம். இதற்கு டிரட்ஜர், மற்றும் சில முக்கியமான கருவிகள் வேண்டும். அவைகளை வாங்கியபிறகு இந்தத் திட்ட வேலை தொடங்கும்.

* 473 Q.—MR. SPEAKER : This question will be taken up a little later.

இரும்புத் தாது (கடையம் பெரும்பத்தூர்)

* 474 **கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடையம் பெரும்பத்தூரில் இரும்பு தாதுப்படிவங்கள் இருப்பது உண்மையா ?

(இ) அப்படியானால், இது சம்பந்தமாய் அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Investigations carried out by the Geological Survey of India during the year 1945-56 reveal the existence of two or three small occurrences of magnetite quartzite deposits in Ambasamudram area but they are not of economic importance. However the area is being investigated by the State Geological Branch with a view to find out the occurrence of iron ore deposits and the report of the State Geologist in this regard is awaited.

தீவிரச் சாகுபடி

* 476 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தீவிர சாகுபடித் திட்டம் செயல்படும் பகுதியில் நெல் தவிர, வேறு தான்யம் எதுவும் பயிர் செய்யக் கூடாது என்ற கட்டுப்பாடு இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.